**செய்தி வெளியீடு எண்: 672** **நாள்:17.09.2020**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் இன்று (17.9.2020) செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர் மற்றும் பல்லாவரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில் வண்டலூர் – கேளம்பாக்கம் – மாம்பாக்கம் சாலை இணையும் சந்திப்பில் 55 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மேம்பாலம் மற்றும் பல்லாவரத்தில் ஜி.எஸ்.டி. சாலையுடன் சந்தை சாலை மற்றும் குன்றத்தூர் சாலை சந்திப்புகளை இணைக்கும் வகையில் 80 கோடியே 74 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மேம்பாலம் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள். மேலும், 30 கோடியே 24 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான பாலங்கள் மற்றும் புறவழிச்சாலையை திறந்து வைத்து, 108 கோடியே 13 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 2 “யூ” வடிவ மேம்பாலங்கள் அமைக்கும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 25.9.2015 அன்று சட்டப்பேரவை விதி எண் 110–ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், பெரிய தெற்கத்தியச் சாலையில் கிலோ மீட்டர் 32/4ல் வண்டலூர் – மாம்பாக்கம் – கேளம்பாக்கம் சாலை சந்திப்பில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் விதமாக ஓர் உயர்மட்டப் பாலம் கட்டப்படும் என்று அறிவித்தார்கள்.

அதன்படி, செங்கல்பட்டு மாவட்டம், தேசிய நெடுஞ்சாலை 45–ல் வண்டலூர் – கேளம்பாக்கம் – மாம்பாக்கம் சாலை இணையும் சந்திப்பில் 55 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மேம்பாலத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

கடந்த 2011–12ஆம் ஆண்டிற்கான நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறையின் மானியக் கோரிக்கையின் போது, சென்னை பெருநகர மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ், ஜி.எஸ்.டி. சாலையில் பல்லாவரம் பகுதியில் குன்றத்தூர் சாலை சந்திப்பு, சந்தை சாலை சந்திப்பில் ஓர் மேம்பாலம் கட்டப்படும் என்று தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, செங்கல்பட்டு மாவட்டம், பல்லாவரத்தில் ஜி.எஸ்.டி. சாலையுடன் சந்தை சாலை மற்றும் குன்றத்தூர் சாலை சந்திப்புகளை இணைக்கும் வகையில் 80 கோடியே 74 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மேம்பாலத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

மேலும், செங்கல்பட்டு மாவட்டம், கிழக்கு கடற்கரை சாலை, இளையனார் குப்பத்தில் பழுதடைந்த பாலத்திற்கு மாற்றாக 23 கோடியே 85 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நான்குவழி உயர்மட்டப் பாலம் மற்றும் புதுப்பட்டினம் புறவழிச்சாலை;

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், கீழ்மாம்பட்டுவில், விக்கிரவாண்டி – கும்பகோணம் – தஞ்சாவூர் சாலையில் 1 கோடியே 75 லட்சம் ரூபாய் கட்டப்பட்டுள்ள பாலம் மற்றும் வேப்பூர் வட்டம், காட்டுமயிலூரில் காட்டுமயிலூர் – கொங்கராம்பாளையம் சாலையில் 1 கோடியே 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்;

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், ரோட்டுப்புதூரில், கள்ளிமந்தயம் – ஓடைப்பட்டி சாலையில் 2 கோடியே 84 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்;

என மொத்தம் 165 கோடியே 98 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மேம்பாலங்கள், புறவழிச்சாலை, பாலங்கள், உயர்மட்டப் பாலம் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

மேலும், சென்னை மாவட்டம், ராஜீவ் காந்தி சாலையில், டைடல் பார்க் சந்திப்பு மற்றும் இந்திரா நகர் சந்திப்பு ஆகிய இடங்களில் 108 கோடியே 13 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 2 ‘‘யூ’’ வடிவ மேம்பாலங்கள் அமைக்கும் பணிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று அடிக்கல் நாட்டினார்கள்.

அதனைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பேசியதாவது: மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருந்த காலத்தில், நான் நெடுஞ்சாலைத் துறை அமைச்சராக பொறுப்பு வகித்த போது, கேளம்பாக்கம் சாலை சந்திப்பில் ஏற்படும் அதிக போக்குவரத்து நெரிசல் காரணமாக வாகனங்கள் கடந்து செல்ல

சிரமம் இருக்கிறதென்ற கோரிக்கை அரசுக்கு வந்தவுடன், மாண்புமிகு அம்மா அவர்கள் அங்கே ஒரு உயர்மட்டப் பாலம் கட்ட வேண்டுமென்று ஆணையிட்டதற்கிணங்க, வண்டலூர் மேம்பாலம் அமைக்கப்படும் என்ற ஒரு அறிவிப்பை வெளியிட்டு, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இப்பணிகள் தற்போது நிறைவு பெற்று இன்று அம்மா அவர்களின் நல்லாசியோடு திறந்து வைக்கப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

வண்டலூர் மேம்பாலம் சுமார் ரூபாய் 55 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இது ஒவ்வொரு பக்கத்திலும் மூன்று வழிகளைக் கொண்ட சாலையாக அமைக்கப்பட்டுள்ளது. இப்பாலப் பணிகள் 24.2.2014 அன்று தொடங்கப்பட்டு, நிலம் கையகப்படுத்துவதில் சில பிரச்சனைகள் இருந்த காரணத்தால் சற்று காலதாமதம் ஏற்பட்டதை நிவர்த்தி செய்து, விரைந்து பணி மேற்கொள்ளப்பட்டு, இன்றையதினம் மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல், இன்றையதினம் பல்வேறு மாவட்டங்களில் உள்ள பாலங்கள், புறவழிச் சாலைகள் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக துவக்கி வைக்கப்பட்டுள்ளன, சில பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

இன்றையதினம், இந்த நிகழ்ச்சியின் வாயிலாக கடலூர், கீழ்மாம்பட்டு, காட்டுமயிலூர், திண்டுக்கல் ஒட்டன்சத்திரம் ரோடு பகுதி, ECR சாலை ஆகிய பகுதிகளில் உயர்மட்டப் பாலங்கள், புதுப்பாலத்திற்கு புறவழிச் சாலை திறந்து வைக்கப்பட்டுள்ளன. ராஜீவ் காந்தி சாலையில் பாலம் கட்ட அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

அதேபோல், பல்லாவரத்தில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க அம்மா அரசால் உயர்மட்டப்பாலம் கட்டப்படுமென்று அறிவிப்பு வெளியிடப்பட்டு, அடிக்கல் நாட்டப்பட்டு, பல்லாவரம் ஜி.எஸ்.டி. சாலையில் ரூபாய் 81 கோடி மதிப்பீட்டில் உயர்மட்டப் பாலம் விரைவாகக் கட்டி முடிக்கப்பட்டு, மக்களின் பயன்பாட்டிற்குத் இன்று அம்மாவின் அரசால் துவக்கி வைக்கப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன். இப்பாலத்தினால் போக்குவரத்து நெரிசல் முற்றிலும் குறைந்து, பாதுகாப்பாக பயணம் மேற்கொள்ள ஏதுவாக இருக்கும்.

ரூபாய் 21.96 கோடி செலவில் நடைபெற்று வரும் கொரட்டூர் வரையறுக்கப்பட்ட சுரங்கப்பாதையின் 95 சதவீதப் பணிகள் நிறைவு பெற்றுவிட்டன. 2020—ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திற்குள் இந்த பாலப்பணி முழுவதும் நிறைவு பெற்று மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும். கொளத்தூர் மேம்பாலப் பணியில் இடதுபுற பாலம் கட்டி முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. ரூபாய் 41 கோடி செலவில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற வலதுபுற பாலப் பணிகள் 90 சதவீதப் பணிகள் முடிவடைந்துள்ளன. 2020—ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திற்குள் முழு பணிகளும் நிறைவு பெற்று மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

கோயம்பேடு சந்திப்பில் மேம்பாலம் அமைக்கும் பணி ரூபாய் 93.50 கோடி செலவில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது, இதில் 75 சதவீதப் பணிகள் முடிவடைந்துள்ளன. 2020—ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் முழு பாலப் பணிகளும் நிறைவுபெற்று மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். ரூபாய் 146.41 கோடி செலவில் மேடவாக்கம் மேம்பாலம் அமைக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதில் 85 சதவீதப் பணிகள் முடிவடைந்துள்ளன. வேளச்சேரி முதல் தாம்பரம் செல்லும் இடதுபுற பாலப் பணிகள் 2020—ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் நிறைவு பெற்று மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும். கீழ்கட்டளை மேம்பாலப்பணி ரூபாய் 64 கோடி செலவில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சுமார் 82 சதவீதப் பணிகள் முடிவடைந்துள்ளது. துரைப்பாக்கத்திலிருந்து பல்லாவரம் செல்லும் பாலப் பகுதி 2020—ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் முடிவடையும். இடது புறப் பகுதியானது 2021—ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் நிறைவு பெற்று மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

திருவொற்றியூர்—பொன்னேரி—பஞ்சட்டி சாலை உயர்மட்டப் பாலம் ரூபாய் 58.64 கோடி செலவில் நடைபெற்று வருகிறது. சுமார் 55 சதவீதப் பணிகள் முடிந்துள்ளன. மீதமுள்ள பணிகள் விரைந்து முடிப்பதற்கு அரசால் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வேளச்சேரி மேம்பாலமும் வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதில் 80 சதவீதப் பணிகள் முடிவடைந்துள்ளன. 2020—ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

ரூபாய் 19.75 கோடி செலவில் தாம்பரம் நடை மேம்பாலம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதில் 50 சதவீதப் பணிகள் நிறைவு பெற்றிருக்கின்றன. ரயில்வே பகுதிப் பணிகளை விரைந்து முடிக்க அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. குரோம்பேட்டை, ராதா நகர் வரையறுக்கப்பட்ட ரயில்வே சுரங்கப்பாதை பணிகள் ரூபாய் 28.99 கோடி செலவில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 2021–ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் பணிகள் முடிக்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும். ரூபாய் 206 கோடி செலவில் பெருங்களத்தூர் ரயில்வே மேம்பாலப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 2022–ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திற்குள் இப்பணிகள் முடிக்கப்படும்.

இப்படி சென்னை மாநகரம், அதையொட்டிய புறநகர்ப் பகுதிகளிலும் போக்குவரத்து நெரிசல் இல்லாமல் சென்னைக்குள்ளும், சென்னையிலிருந்து பல்வேறு மாவட்டங்களுக்கு செல்வதற்கும் அம்மாவின் அரசு பல்வேறு பாலங்களை கட்டிக் கொடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு.பா. பென்ஜமின், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை முதன்மைச் செயலாளர் திரு.ஆ.கார்த்திக், இ.ஆ.ப., செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. அ. ஜான் லூயிஸ், இ.ஆ.ப., தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) திருமதி என். சாந்தி, தலைமைப் பொறியாளர் (நபார்டு மற்றும் கிராமச் சாலைகள்) திரு.எம்.கே. செல்வன், தலைமைப் பொறியாளர் (பெருநகரம்) திருமதி ச.சுமதி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 17.9.2020**